## November 11, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. முதியோர்களுக்காக தமிழகம் முழுவதும் திருச்சி உள்பட 25 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள அன்புச் சோலை மையங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திருச்சியில் காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.
    i. ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட முதியோர்களுக்காக முதியோர் இல்லங்கள், ஒருங்கிணைந்த வளாக இல்லங்கள், நடமாடும் மருத்துவ அலகுகள் என பல்வேறு நலத்திட்டங்களையும் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில், முதியோர்களுக்காக தமிழக முழுவதும் அன்புச் சோலை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.
    ii. திருச்சி பொன்மலைப்பட்டியில் பாவை பவுண்டேசனுடன் இணைந்து அமைக்கப்பட்டுள்ள மையத்திலிருந்து, தமிழகம் முழுவதும் உள்ள 25 மையங்களையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.
2. புது தில்லியில் உள்ள ஜவாஹர்லால் நேரு மைதானத்தை, பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை நடத்தக் கூடிய வகையில், போட்டியாளர்கள் தங்கும் வசதியுடன் கூடிய விளையாட்டு நகரமாக மாற்ற மத்திய விளையாட்டு அமைச்சகம் திட்டமிட்டுள்ளது.
3. எஃப்ஐஎச் ஜூனியர் ஆடவர் உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டிக்கான சின்னமான 'காங்கேயனை' அறிமுகம் செய்து, கோப்பை சுற்றுப்பயணத்தையும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
    i. சர்வதேச ஹாக்கி சம்மேளனம், ஹாக்கி இந்தியா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் 14- ஆவது ஜூனியர் ஆடவர் உலகக் கோப்பை ஹாக்கிப் போட்டி வரும் நவ. 28 முதல் டிச. 10-ஆம் தேதி வரை சென்னை, மதுரையில் நடைபெறவுள்ளது.
4. ஹரியாணாவை சேர்ந்த 9 வயது அர்ஷி குப்தா, தேசிய கார்டிங் சாம்பியன்ஷிப்பில் பட்டம் வென்ற இந்தியாவின் முதல் பெண் போட்டியாளர் என்ற சாதனையை படைத்தார்.
    i. பெங்களூரில் நடைபெற்ற 2025 எஃப்எம்எஸ்சிஐ இந்தியன் ரோடாக்ஸ் மேக்ஸ் தேசிய கார்டிங் சாம்பியன்ஷிப்பில், சிறார்களுக்கான மைக்ரோ மேக்ஸ் கிளாஸ் கலப்பு கிரிட்டில் பங்கேற்று அவர் வாகைசூடினார்.
5. இந்தியா தெரிவித்ததைப் போல செம்பு பொருள்கள் மீதான அமெரிக்காவின் வரிவிதிப்பு தற்காப்பு நடவடிக்கை அல்ல என்று உலக வர்த்தக அமைப்பிடம் அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.
    i. மின்சார வாகனங்கள், மின் கட்டமைப்புகள், செமிகண்டக்டர்கள், பாதுகாப்புத் துறைக்கான மின்னணுப் பொருள்கள் ஆகியவற்றின் தயாரிப்பில் மூலப்பொருளாகச் செம்பு பயன்படுத்தப்படுகிறது.
    ii. கடந்த நிதியாண்டில் அமெரிக்காவுக்கு 360 டாலர் மில்லியன் டாலர் (சுமார் ரூ.3,190 கோடி) மதிப்பில் தட்டுகள், ட்யூப்கள் உள்ளிட்ட செம்பு பொருள்களை இந்தியா ஏற்றுமதி செய்துள்ளது.
    iii. இந்நிலையில், வெளிநாடுகளில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் செம்பு பொருள்களுக்கு அந்நாட்டு அரசு 50 சதவீதம் வரி விதித்தது. கடந்த ஆகஸ்ட் 1 முதல் இந்தவரிவி தீப்பு அமலுக்கு வந்தது.
    iv. வெளிநாடுகளில் இருந்து செம்பு இறக்குமதி செய்யப்படுவதால் அமெரிக்காவின் தூய்மை எரிசக்தி, உள்கட்டமைப்பு உள்ளிட்ட துறைகள் பாதிக்கக் கூடும் என்று கருதி, அந்த இறக்குமதியைச் சார்ந்திருப்பதை குறைக்கும் நோக்கில், இந்த வரி விதிக்கப்பட்டதாக அந்நாடு தெரிவித்தது.

v. இதைத் தொடர்ந்து அமெரிக்காவுக்கு குறிப்பிடத்தக்க அளவு செம்பு பொருள்களை ஏற்றுமதி செய்வதால், அந்நாட்டின் 50 சதவீத வரி விதிப்பு தமது ஏற்றுமதியாளர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாக உலக வர்த்தக அமைப்பில் இந்தியா முறையிட்டது.

6. ரஷிய அதிபர் விளாதிமீர் புதினின் அடுத்த மாத இந்தியப் பயணத்தின்போது, ரஷியாவில் 70,000 இந்தியர்களுக்கு பணி வாய்ப்பை உறுதிப்படுத் துவது தொடர்பான ஒப்பந்தம் கையொப்பமாகும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.
   i. ரஷியாவின் வளர்ந்துவரும் பொருளாதாரத்தில், திறமையான மற்றும் தகுதிவாய்ந்த பணியாளர்களின் பற்றாக்குறை தொடர்ந்து இருந்து வருகிறது. நடப்பு ஆண்டின் இறுதிக்குள், ரஷிய தொழிலாளர் அமைச்சகத்தின் ஒதுக்கீட்ட டின்கீழ், 70,000-க்கும் மேற்பட்ட இந்தியர்கள் ரஷியா முழுவதும் அதிகாரபூர்வமாகப் பணியமர்த் தப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
   ii. இது தொடர்பாக இந்தியா-ரஷியா இடையே கையொப்பமாகவுள்ள ஒப்பந்தமானது, தொழிலாளர்களின் சட்டபூர்வமான இடப்பெயர்வு மற்றும் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான வலுவான கட்டமைப்பை உருவாக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

7. மாலத்தீவில் இந்திய நிதி உதவியுடன் புதிதாகக் கட்டப்பட்ட ஹனிமது விமானநிலையத்தை அந்நாட்டு அதிபர் முகமது மூயிஸ் திறந்து வைத்தார்.
   i. வடக்கு மாலத்தீவின் வளர்ச்சியை அதிகரித்து சர்வதேச வளர்ச்சியை மேம்படுத்தும் தூண்டுகோலாக இந்த விமானநிலையம் இருக்கும் என மூயிஸ் புகழாரம் சூட்டினார்.
   ii. இந்த விமான நிலையம் இந்தியா-மாலத்தீவு இடையே யான 60 ஆண்டு தூதரக உறவின் பிரதிபலிப்பாகும் என்றார். இந் நிகழ்ச்சியில் இந்தியா சார்பில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு உள்பட இரு நாடுகளின் மூத்த அதிகாரிகள் கலந்துகொண்டனர்.
   iii. ஹனிமது விமானநிலைய திட்டத்துக்கு ரூ.7,096 கோடி கடனுதவியை இந்திய ஏற்றுமதி-இறக்குமதி வங்கி வழங்கியது. இதற்கான ஒப்பந்தம் இந்தியா-மாலத்தீவு இடையே 2019-இல் கையொப்பமிடப்பட்டது. இந்தியாவின் அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கும் கொள்கை மற்றும் மகாசாகர் தொலைநோக்குத் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளதாக இந்திய தூதகம் தெரிவித்தது.

8. இந்தியா-அங்கோலா இடையே பொருளாதா ரரீதியாக உறவை வலுப்படுத்த பல்வேறு துறைகளில் வாய்ப்புகள் குவிந்திருப்பதாக அந்நாட்டு நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு திங்கள்கிழமை (நவ.10) தெரிவித்தார்.
   i. ஆப்பிரிக்க பிராந்தியத்தில் உள்ள அங்கோலா மற்றும் போட்ஸ்வானா ஆகிய நாடுகளுக்கு 6 நாள் அரசுமுறைப் பயணமாக சனிக்கிழமை (நவ.8) திரௌபதி முர்மு புறப்பட்டார்.
   ii. அங்கோலா நாடாளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரையில், 'வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்து ழைப்பு ஆகியவை இந்தியா-அங்கோலா இடையேயான இருதரப்பு உறவின் முக்கியத் தூண்களாகதிகழ்கின்றன.
   iii. அங்கோலா நாடாளுமன்றத்தில் 39 சதவீதம் பெண் உறுப்பினர்கள் இருப்பது பாராட்டுக்குரியது. இந்தியாவிலும் மக்களவை மற்றும் பேரவைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு அளிக்க சட்டம் இயற்றப்பட்டுள்ளது' என்றார்.
   iv. நாடாளுமன்றத்தில் உரையாற்றும் முன் அங்கோலா சுதந்திரப் போராட்டத்தில் முக்கியப் பங்காற்றிய அந்நாட்டின் முதல் அதிபர் அண்டோனியா அகஸ்தினோ

அகோஸ்டினோ நெட்டோ நினைவகம் சென்று மரியாதை செலுத்தினார்.

v. அங்கோலா பயணத்தை முடித்துக்கொண்டு போட்ஸ்வானாவுக்கு திரௌபதி முர்மு செல்கிறார்.